அன்பு, இரக்கம் முதலிய உயர் குணங்களையும் நன்கு புலப்படுத்தும்.

இனி, கடைச்சங்க காலத்திற்குப் பல நூற்றாண்டுகளின் பின்பு, கம்பர் முதலிய புலவர் பெருமக்கள் விளங்கிய காலத்திலோ, சிறிது முன்னையேயோ மகளிரில் ஒருவர் தலை சிறந்த புலமையுடையராய்த் திகழ்ந்தார். அக்காரணத்தானே சங்ககாலத்து ஔவையார் பெயரைச் சிறப்பாகப் பெற்று, அதனானே வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆத்திசூடி முதலிய நூல்களெல்லாம் இவரியற்றியனவேயாகும். ஔவையார் பெயருடன் இயைத்து எழுதப்பட்டும், செவியாறுகளாகவும் வழங்கிவருகின்ற கதைகள் அளவில்லாதன. அக்கதைகளெல்லாம் பு[illegible] ஔவை யென்னும் பாகுபாடின்றியே வழங்குகின்றன. புலவர் புராணமுடையாரே ஔவையார் இருவரெனத் துணிந்து,

'முன்னௌவை கல்வருட மொன்றாயிரத்தாள்,
பின்னௌவை ஞானகால வாயிரத்திற் பிறந்திட்டாள்'

எனக் கூறினர்.

தமிழ் நாவலர் சரிதையில் நாற்பத்தொரு செய்யுட்கள் ஔவையாரியற்றியனவாக அவர் பாடிய வரலாற்றுக் குறிப்புடன் உள்ளன. அவற்றுள் ஒன்றே புறநானூற்றிலுள்ளது. அதியனையும், புல்வேளூர்ப் பூதனையும், சேரமானையும், நாஞ்சில் வள்ளுவனையும், எழிற்கோவையும் பாடிய பாட்டுகளும், அங்கவை சங்கவை யென்னும் பெண்களுக்கு மணமுடித்தற்காகப் பாடிய பாட்டுகளும் சங்ககாலத்துடன் இயைந்துள்ளன. ஒரு சில தொல்காப்பியவுரையில் மேற்கோளாகவும் வந்துள்ளன. பிறவற்றைப் பற்றி ஒன்றுங் கூறுமாறில்லை. ஆகையாற் சங்க காலத்துடன் இயைந்திருக்கின்ற பாட்டுகளுள்ளும் பல தாம் ஔவையார் வாக்கல்ல வென்பதைக்

